Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.309/2024

Dated 25-09-2025
Deposition of witness for : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேவியர் | வயது | : | 47 |
| தந்தை பெயர் | : | அபுர்வசாமி | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | விஷ்ணம்பேட்டை | தொழில் | : | ஆட்டோ ஓட்டுனர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுகை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து வல்லவன் என்பவருடையது. அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ-2. ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள முதல்

கையெழுத்து என்னுடையதுதான்.

3) மேற்படி கையெழுத்தை எப்போது போட்டேன் என்று நினைவு இல்லை.

4) ஆஜர் எதிரி என் மாமா மகன். அவர் கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார்கள்.

5) இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

6) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது இந்த வழக்கு சம்பந்தப்பட்ட எதிரியை போலிசார் கைது செய்தார்கள் என்றும் அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுததார் என்றும் அதன் அவர் எடுத்து ஆஜர் செய்த கத்தியை மகஜர் மூலம் போலிசார் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் வல்லவன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொல்லி விட்டு தற்போது எதிரி என் மாமா மகன் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.